**தலைப்பு 227 – ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 227 – ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்டோபர் 25 ஆம் திகதியன்று ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்பப் பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயபூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாடு ரூபா 722.11 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 713.70 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, திணைக்களத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாட்டில் 1.16 சதவீதமான ரூபா 8.41 மில்லியன் சேமிப்புக்குள்ளாகியிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு, நிகர நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | நிகர நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டு வருவன | 633.91 | 626.26 | 7.65 | 1.21 |
| மூலதனம் | 88.20 | 87.44 | 0.76 | 0.87 |
| மொத்தம் | 722.11 | 713.70 | 8.41 | 1.16 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களம் வருமானக் குறியீடு 20.03.02.03 மூலம் 2016 ஆம் ஆண்டிற்கென மதிப்பீடு செய்திருந்த வருமானம் ரூபா 150.00 மில்லியனாகும். மீளாய்வாண்டின்போது ரூபா 235.40 மில்லியன் கூட்டுத் தொகையானது வருமானமாக சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 157 சதவீதமாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

**2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | அதிகரிப்பு | அதிகரிப்பு, மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.03 | 150.00 | 235.40 | 85.40 | 57 |

## 2.3. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்தினது 22701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய எல்லை | உள்ளவாறானது | அதி குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதி கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 26.00 | 25.03 | 16.00 | 20.28 | 70.00 | 50.32 |

## 2.4 கட்டு நிதிக் கணக்கு

திணைக்களத்தின் 7002/0000/00/0033/016/000 இலக்க கட்டு நிதிக் கணக்கின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 4.72 மில்லியனாகும்.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தினது 04 பொது வைப்புக் கணக்குகளது 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 8.79 மில்லியனாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா.மில்லியன் |
| 6000/0000/00/0001/0055/000 | 2.72 |
| 6000/0000/00/002/0073/000 | 0.06 |
| 6000/0000/00/0016/0023/000 | 5.95 |
| 6000/0000/00/0018/0030/000 | 0.06 |
| **மொத்தம்** | **8.79** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளுள் போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

கணனிகள், துணைப்பாகங்கள், மென் அணிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்றை 2002 செப்டம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைப் பிரகாரம் திணைக்களம் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணியிருக்கவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏழு செலவின விடயங்களுக்கு அதிகளவில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய நிகர நிதியேற்பாட்டின் 10 முதல் 36 சதவீதமாக அமைந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது 94(1) ஆம் நிதிப்பிரமாணத்திற்கு முரணாக செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியிலும் அதிகமாக ரூபா 4.93 மில்லியனுக்கான பொறுப்புகள் உருவாகியிருந்தன.

### 3.3 வருமானக் கணக்கு

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் எனும் அடிப்படையில் வருமானக் குறியீடுகளது வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கிலிடுதல், கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய பணிகளுக்கு பொறுப்பாவார்.

அவ்வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வு செய்யப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீடுகளுக்கேற்ப ரூபா 150 மில்லியன் வருமானத்தைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்திருந்தபோதிலும், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ரூபா 235 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 157 சதவீதமாகும்.

(ஆ) சேகரிப்புக் கணக்கின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின்போது ஒரு நாள் சேவை வருமானமாக ரூபா 205,370,000 சேகரிக்கப்பட்டிருந்தபோதும், கணனி முறைமையின் பிரகாரம் அத் தொகை ரூபா 208,684,753 ஆகியமையால் ரூபா 3,314,753 நிகர வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) திணைக்களத்தின் முத்திரை வருமான விண்ணப்பப் படிவப் பெறுவனவு ரூபா 870,789 ஆக அறிக்கையில் காட்டப்பட்டிருந்தபோதும், கணனி முறைமைப் பிரகாரம் அத் தொகை ரூபா 1,001,265 ஆகியமையால் ரூபா 130,476 வேறுபாடு நிலவியது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

விடய இலக்கம் 22701 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்குள்ளானபோது அத் தினத்தில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதி ரூபா 368,804 கூட்டுத் தொகையாகக் காணப்பட்டதுடன் அந்நிலுவை மீதிகள் 01 முதல் 12 ஆண்டுகள் வரையிலானவை எனவும் காணப்பட்டதால் அக் கடன் நிலுவை மீதிகளை அறவிடத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.5 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 6.19 மில்லியன் வைப்புகளை 571 ஆம் நிதிப் பிரமாணத்தின்படி அரச வருவாயில் செலவு வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**3.6 செயலாற்றல்**

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) 2011 ஆகஸ்ட் 17 முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைச் செயற்திட்டம் அமுலாகி வருவதுடன் அதன் மூல மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 14,500 மில்லியனாகவும் திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர், அதனை ரூபா 8,000 வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தச் செயற்திட்டமும் ஆரம்ப, இரண்டாம், மூன்றாம் கட்டங்களாக அமைந்ததுடன் 2017 செப்டம்பர் 15 ஆம் திகதியளவிலும் அது ஆரம்பக் கட்டத்திலேயே இருந்தது. மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் ஒட்டுமொத்த மீளாய்வு செய்யப்பட்ட செலவினத்தில் 15 சதவீத செயல் முன்னேற்றம் தென்படுவதுடன் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தத் திட்டத்தின் அத் தினத்தில் உள்ளவாறான மொத்தநிதிசார் முன்னேற்றம் பின்வருமாறு அமைந்திருந்தது.

| பணி | மீளாய்வு செய்யப்பட்ட நிதிசார் மதிப்பீடு | 2016 டிசெம்பர் 31 வரையான உள்ளவாறான செலவினம் | சதவீத முன்னேற்றம் |
|---|---|---|---|
| ------------- | ------------------------- | ------------------------- | -------------------- |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | . |
| பௌதிக உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | 456.26 | 319.23 | 69.96 |
| தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | 1907.00 | 184.91 | 9.70 |
| பிரஜைகளது தரவுகளைச் சேகரித்தல் | 954.43 | 445.92 | 46.72 |
| பிரஜைகளது தரவுகளை இலத்திரனியலாக்கல் | 715.80 | - | - |
| நபர்களுக்கான அட்டைகள் | 2775.0 | 76.0 | 2.73 |
| மூலதனச் செலவினம் | 40.0 | 19.35 | 48.37 |
| திணைக்களத்தின் கூறுகளிலும் தரவு நிலையங்களிலும் செயற்பாடு மற்றும் நாளதுவரையாக்கல் என்பன | 673.06 | 63.67 | 9.45 |
| உசாத்துணையாளரும் மூலவளப்பங்களிப்பாளரும் | 62.04 | 38.82 | 62.57 |
| செயற்திட்ட முகாமைத்துவமும் ஒழுங்குபடுத்தலும் | 227.51 | 84.05 | 36.94 |
| எதிர்பாராதவை | 189.59 | - | - |
| | ------------- | ------------- | |
| **மொத்தம்** | **8000.69** | **1231.95** | **15.39** |
| | ====== | ====== | |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் ஒவ்வொரு பணி சம்பந்தமான மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீட்டை உள்ளவாறான செலவினத்துடன் ஒப்பிடுகையில், பௌதீக உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தியும் உசாத்துணை மற்றும் மூலவள பங்களிப்பாளர் தொடர்பாகவே கூடிய நிதிசார் செயல் முன்னேற்றம் தென்பட்டதுடன் அவை முறையே 69.96 மற்றும் 62.57 சதவீதமாகவும் அமைந்திருந்தன.

(ii) ஏனைய பணிகளின் ஒட்டு மொத்த நிதிசார் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்ததுடன் அவற்றுள் தகவல் தொழில்நுட்ப அடிப்படை வசதிகளின் அபிவிருத்தி, திணைக்களக் கூறுகளிலும் தரவு நிலையங்களிலும் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள், நாளதுவரையாக்கல், நபர்களுக்கான அட்டைகள் என்பன 10 சதவீதத்திற்கும் குறைவாகவே தென்பட்டன.

(iii) செயற்திட்டப் பணிகளுள் பிரஜைகள் தரவு இலத்திரனியலாக்கல் சம்பந்தமாக நிதிசார் செயல் முன்னேற்றம் எதுவும் தென்படவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 09 செயற்திட்டப் பணிகள் ஒவ்வொன்றினதும் நிதிசார் செயல் முன்னேற்றமும் பௌதீக செயல் முன்னேற்றமும் பின்வருமாறு அமைந்திருந்தன.

| பணி | 2016 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு | நிதிசார் செயல் முன்னேற்றம் | சதவீத நிதிசார் செயல் முன்னேற்றம் | சதவீத பௌதிக செயல் முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| ------------- | -------------------------- | ------------------------- | --------------------- | -------------------- |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | | |
| பௌதிக உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | 249.38 | 156.48 | 62.7 | 54.2 |
| தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | 376.00 | 182.19 | 48.5 | 30.0 |
| பிரஜைகளது தரவுகளைச் சேகரித்தல் | 37.04 | 1.27 | 3.4 | 9.2 |
| பிரஜைகளது தரவுகளை இலத்திரனியலாக்கல் | 71.58 | - | 0.0 | 0.0 |
| நபர்களுக்கான அட்டைகள் | 200.00 | 76.00 | 38.0 | 80.0 |
| மூலதனக் கிரயம் | 10.00 | - | 0.0 | 60.0 |
| திணைக்களத்தின் கூறுகளிலும் தரவு நிலையங்களிலும் செயற்பாடு மற்றும் நாளதுவரையாக்கல் என்பன | 17.70 | 8.03 | 45.4 | 33.3 |
| உசாத்துணையாளரும் மூலவளப்பங்களிப்பாளரும் | 16.45 | 12.09 | 73.5 | 100.0 |
| செயற்திட்ட முகாமைத்துவமும் ஒழுங்குபடுத்தலும் | 21.85 | 19.97 | 91.4 | 90.0 |
| | -------------- | ------------- | | |
| **மொத்தம்** | **1000.00** | **456.02** | **45.6** | **50.7** |
| | ====== | ====== | | |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டப் பணிகளுள் பிரஜைகள் தரவு இலத்திரனியாக்கலும் மூலதனச் செலவினமும் எதுவித முன்னேற்றமும் இல்லாதிருந்தன.

(ii) 2016 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டப் பணிகளது பௌதீக செயல் முன்னேற்றத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில் உசாத்துணை மற்றும் மூலவளப் பங்களிப்பாளர், செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு,

நபர்களுக்கான அட்டைகள் ஆகியவை தொடர்பாக 75 சதவீதத்திற்கும் அதிகமாக செயல் முன்னேற்றம் தென்பட்டபோதும், மூலதனச் செலவினம், பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி போன்ற இரு பிரிவுகளும் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட செயல் முன்னேற்றத்தைத் தென்படுத்தியிருந்தன.

(iii) திணைக்களக் கூறுகளிலும் தரவு நிலையங்களிலும் செயற்பாடு மற்றும் நாளதுவரையாக்கல், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி போன்ற பிரிவுகளது செயல் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்ததுடன், பிரஜைகள் தரவுச் சேகரிப்பு 10 சதவீதத்திற்கும் குறைவான முன்னேற்றத்தையே காட்டியிருந்தன.

(iv) 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சகல பணிகளுக்கான துறைகளிலும் குறைந்தளவு செயல் முன்னேற்றமே நிலவுவதானது ஆட்களைப் பதிவு செய்யும் அதிகாரச் சட்டப் பிரமாணங்கள் அங்கீகரிக்கப்படாமை காரணமாகும். மேலும், 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சிறந்த, தகுதி வாய்ந்த வசதிகளுடனான இடமொன்றில் இடர் நிவாரண நிலையத்தை நிர்மாணிக்கும் வேலை தொடர்ந்து தாமதமாகியவாறிருந்தது. ஆகவே, அதனுடன் தொடர்புடைய VPN (Virtual Private Network) பிரதான இணையதளமும் பிரதேச அலுவலகங்களுக்கிடையே VPN இணையதளம் மற்றும் மின் சக்தி உற்பத்தி இயந்திரங்களையும் (Power Generators) பெறுவது போன்ற திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவு செய்வதில் தாமதம் நிலவியது.

(இ) மீளாய்வாண்டின்போது சாதாரண சேவையின் கீழ் திணைக்களம் 607,660 அடையாள அட்டைகளை வழங்கியிருந்தது. ஒரு நாள் சேவையின் கீழ் 205,370 அடையாள அட்டைகளை வழங்கியிருந்தது. மொத்த அடையாள அட்டைகளது எண்ணிக்கை 813,030 ஆகும். அவ்வாறிருந்தபோதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 804,850 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதாக 8,450 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின்போது சாதாரண சேவையின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 808,322 ஆகும். எவ்வாறாயினும், அதில் ஏறக்குறைய 75 சதவீதமான 607,660 விண்ணப்பப் படிவங்களுக்கான அட்டைகளே வழங்கப்பட்டிருந்தன.

### 3.7 முகாமைத்துவ நலிவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் அதிகாரச் சட்டத்தின் (திருத்தம்) பிரகாரம் ''ஆட்கள் தொடர்பான தேசிய பெயர்ப் பதிவேடு'' எனும் தரவுத் தொகுப்பு ஏற்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 2017 செப்டெம்பர் 30 வரை அதனைச் செயற்படுத்துவது தவறியிருந்தது. 2017 நவம்பர் 09 ஆந் திகதி ஆணையாளர் நாயகம் வழங்கிய பதிலின் பிரகாரம் 2016 யூலை 07 ஆந் திகதியன்று ஆட்களைப் பதிவு செய்யும் அதிகாரச் சட்டம் திருத்தஞ் செய்யப்பட்டிருந்தபோதும், அதில் உள்ள ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான பிரமாணங்களுக்கான அங்கீகாரத்தை 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதியே பாராளுமன்றம் வழங்கியிருந்தாகக் குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) 2016 ஆம் ஆண்டின்போது 6,370 பிரச்சினைகளுக்குரிய விண்ணப்பப் படிவங்கள் திணைக்களத்தின் சட்டப் பிரிவில் கிடைக்கப்பெற்றதுடன் அவற்றுள் 36 சதவீதமான 2,330 விண்ணப்பப் படிவங்கள் சம்பந்தமாக போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவுமில்லை. இவ் விண்ணப்பப் படிவங்களாவன, போலியான

பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பித்தல், 2 ஆம் இலக்கத்தின் கீழ் அடையாள அட்டையைப் பெறுதல் மற்றும் சந்தேகத்துக்கிடமான பிறப்புச் சான்றிதழ்களைப் பரிசீலிப்பதற்கு பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு அவற்றை அனுப்பி வைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டவை என்பனவாகும்.

(இ) முன் கூட்டியே அச்சிடப்பட்ட ஒரு மில்லியன் அட்டைகளைக் கொள்வனவு செய்தல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 ஆம் ஆண்டின் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.6 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் முன் கூட்டியே அச்சிடப்பட்ட ஒரு மில்லியன் அட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கான பொருட் கொள்வனவு வடிவமைப்பைக் குறிப்பிடும்போது ''அட்டைகள் பொலிகாபனேட் வகையில் அமைந்ததாக மாத்திரமே இருக்க வேண்டும்''(The Material type must be Polycarbonate only) எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமாயினும் ''பொலிகாபனேட்டாக இருக்க வேண்டும்'' (Base Lard material (substrate) must be Polycarbonate) எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) முன் கூட்டியே அச்சிடப்பட்ட அட்டைகளைத் திணைக்களத்திற்கென அச்சிடுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட அச்சிடல் இயந்திரங்களது வடிவமைப்பும் பொலிகாபனேட் அட்டைகள் மூலம் அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கானவாறு தயாரிக்கப்பட்டிருந்தன.

(iii) கொள்வனவின்போது மாதிரி அட்டைகளைக் கூறு விலையாளர்களிடமிருந்து பெற்றிருக்க வேண்டுமாயினும் கூறு விலை ஆவணங்களில் ''இருக்குமாயின்'' (if available) எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் மூலம் மாதிரி அட்டைகளது தரத்தைத் தகுதிக்கேற்பக் கொள்வனவு செய்யும் வாய்ப்பு அற்றுப்போனது.

(iv) ஒரு மில்லியன் முன் கூட்டியே அச்சிடப்பட்ட அட்டைகளது கொள்வனவுக்கான கூறு விலையாளர்களது சகல கூறு விலைப் பிணையும் 2016 டிசெம்பர் 15 ஆந் திகதியன்று காலாவதி ஆகியிருந்தன. எவ்வாறாயினும், தனியார் நிறுவனம் ஒன்று அவற்றை 2017 மார்ச் 01 ஆந் திகதி ரூபா 71.83 மில்லியனுக்கு வழங்கியிருந்தது.

(v) ஒரு மில்லியன் முன் கூட்டியே அச்சிடப்பட்ட அட்டைகளைக் கொள்வனவு செய்தலானது 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி ஆரம்பமாகியது. 2017 செப்டெம்பர் 07 ஆந் திகதியளவிலும் அது நிறைவேறுவது தவறியிருந்தது.

(ஈ) திணைக்களம் அச்சிட்டு வழங்கும் அடையாள அட்டைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது ஒரு நபருக்கு 2 அடையாள அட்டைகள் வீதம் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் புலனாகின.

(ii) அடையாள அட்டைகளை மீண்டும் திருத்தம் செய்யும்போது / வழங்கும்போது பழைய இலக்கங்களுக்குப் பதிலாக வேறு இலக்கங்கள் இடப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) ஒரே இலக்கத்துடனான அடையாள அட்டைகள் இருவருக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

**3.8 நட்டங்களும் இழப்புகளும்**

அச்சிடல் நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்படும் அட்டைகளில் 10 சதவீதத்துக்கு மேற்பட்டவை விரயமாவதுடன், 2016 ஆம் ஆண்டின்போது அச்சிடப்பட்ட 810,810 அட்டைகளில் 140,683 அட்டைகள் அதாவது 17 சதவீதமானவை விரயமாகியிருந்தன. இதற்கான கிரயம் ரூபா 4,642,539 ஆகும்.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 23 | 5 |
| (ii) | மூன்றாம் நிலை | 4 | 2 | 2 |
| (iii) | இரண்டாம் நிலை | 1195 | 990 | 205 |
| (iv) | ஆரம்ப நிலை | 142 | 121 | 21 |
| (v) | ஒப்பந்தம் | 08 | 07 | 01 |
| | **மொத்தம்** | **1377** | **1143** | **234** |